(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

**இல. 1(12).]** 

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2022 ஏப்ரல் 29 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2022 மே 17, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2044/2022

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— பிரதம அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் மொனராகலை மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(i) அவ்வெண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் மொனராகலை மாவட்டத்தில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்புக் கிராமங்களில் தற்போது நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ள வீடமைப்புக் கிராமங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) இதுவரையில் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படாத வீடமைப்புக் கிராமங்கள் காணப்படின், அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி வீடமைப்புக் கிராமங்களின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் மொனராகலை மாவட்டத்தில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றுள் தற்போது நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ள மற்றும் நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்ற வீடுகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2060/2022

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் நெடுஞ்சாலைகள் விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள்;

வெவ்வேறாக யாவை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2072/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— அரச சேவைகள், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டச் செயலகத்தில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2085/2022

கௌரவ அமரகீர்த்தி அதுகோரள,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஈரப்பதன் 14% இற்குக் குறைவான நெல் கொள்வனவு செய்யப்படுவதன் காரணமாக நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு நட்டம் ஏற்படுவதில்லையா என்பதையும்;

(ii) ஈரத்தன்மைமிக்க நெல் ஒரு கிலோகிராமின் கொள்வனவு விலை யாது என்பதையும்;

(iii) ஒரு கிலோ கிராம் உலர்ந்த நெல்லை தயார் செய்துகொள்ளத் தேவையான ஈரத்தன்மைமிக்க நெல்லின் அளவு யாதென்பதையும்;

(iv) ஈரத்தன்மைமிக்க நெல், உலர்த்துவதற்காக சிறியளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(v) ஆமெனில், அதற்காக ஒரு கிலோகிராமுக்கு செலுத்தப்படும் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) அவ்வாறு வழங்கப்படுகின்ற நெல் ஒரு கிலோகிராமை ஏற்றிச் செல்வதற்காக செலுத்தப்படும் தொகை எவ்வளவென்பதையும்;

(vii) அதற்கமைய உலர்ந்த நெல் ஒரு கிலோகிராமை தயார் செய்துகொள்வதற்குச் செலவாகும் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2095/2022

கௌரவ அஜித் ராஜபக்ஷ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்திற்கு அமைய இலங்கை ஆசிரியர் சேவை மற்றும் இலங்கை அதிபர் சேவையின் அலுவலர்கள் தொடர்பில் தாபன விதிக் கோவையின் I ஆம் தொகுதியின் II ஆம் அத்தியாயத்தின் 12.1 இன் ஏற்பாடுகளுக்குப் புறம்பாக/மிகைத்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு சட்ட ரீதியான தத்துவம் அளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி எழுத்திலான சட்டம் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) தாபன விதிக் கோவையின் I ஆம் தொகுதியின் XXV ஆம் அத்தியாயத்தின் 4:1 மற்றும் 2009.02.20 ஆம் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் 146 ஆம் பிரிவின் VI ஆம் உட்பிரிவுக்கு அமைய 2021.09.30 ஆம் திகதியளவில் இலங்கை அதிபர் சேவை மற்றும் இலங்கை ஆசிரியர் சேவையின் அலுவலர்களிலிருந்து தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு முழு நேர அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ள அலுவலர்களின் எண்ணிக்கை, மேற்படி ஒவ்வொரு அலுவலரின் பெயர், விடுவிக்கப்பட்ட திகதி, மேற்படி சந்தர்ப்பத்தில் பதவி மற்றும் கடமை முகவரி என்பன தனித்தனியே யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2113/2022

கௌரவ இஷாக் ரஹுமான்,— வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டில் இலங்கையில் யானை-மனித மோதல் காரணமாக மரணமடைந்த நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவ்வாறு மரணமடைகின்ற நபரொருவர் சார்பில் வழங்கப்படுகின்ற நட்ட ஈட்டுத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) யானை-மனித மோதலைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2261/2022

கௌரவ ரோஹினீ குமாரி விஜேரத்ன,— அரச சேவைகள், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச சேவைக்கு புதிதாக ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட பயிலுநர் பட்டதாரிகளுக்கு பிரசவ விடுமுறை வழங்காதிருப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இத்தீர்மானம் காரணமாக அவர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட தீர்மானத்தை நீக்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2457/'2022

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022 ஆம் ஆண்டில் இதுவரை இலங்கைக்கு வருகை தந்துள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2022 ஆம் ஆண்டில் வருகை தரக்கூடுமென எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் மூலம் 2022 ஆம் ஆண்டில் ஈட்டுவதற்கு எதிர்ப்பார்க்கப்படும் வருமானம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2565/2022

கௌரவ வடிவேல் சுரேஷ்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெருந்தோட்டக் கம்பனிகளினால் இன்றளவில் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற இலங்கையிலுள்ள பெருந்தோட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி தோட்டங்களின் காணி உரித்து அரசாங்கத்திற்குரியதாக உள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், மேற்படி காணிகளின் உரித்து அரசாங்கத்திடமிருந்து அகற்றப்பட்டு முழுமையாக பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு மாற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தோட்டங்களில் வாழ்கின்ற மக்களுக்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொடுக்கின்ற போது உரிய பெருந்தோட்டக் கம்பனிகளிடம் அனுமதி பெற வேண்டுமா என்பதையும்;

(ii) குறிப்பாக, பெருந்தோட்ட வீடுகளுக்கு குடிநீர் வசதிகள் மற்றும் மின்சார வசதிகளைப் பெற்றுக்கொள்கின்றபோதும் வீடமைப்பிற்காக காணிகளைப் பெற்றுக்கொள்கின்றபோதும் உரிய பெருந்தோட்டக் கம்பனிகளிடம் அனுமதி பெற வேண்டுமா என்பதையும்;

(iii) இந்த நிலைமையானது, அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தடையாக அமையுமென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி நிலைமையினை சீர்செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2569/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு மைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் இருக்கும் பழக்கப்பட்ட யானைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பழக்கப்பட்ட யானைகளின் உரிமையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவ்வொவ்வொரு நபரினதும் பெயர் மற்றும் முகவரி என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பழக்கப்பட்ட யானைகளின் நலனுக்காக இதுவரை முறையான வேலைத்திட்டமொன்றோ அல்லது சட்ட முறைமையோ தயாரிக்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2022 மே 18, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2633/2022

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் சமையல் எரிவாயு தொடர்பில் சமூக உரையாடலொன்று உருவாகியுள்ளமையை அறிவாரா;

(ii) 2020 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை இலங்கைச் சந்தைக்கு சமையல் எரிவாயுவை வழங்கும் கம்பனிகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி கம்பனிகள் யாவை;

(iv) மேற்படி ஒவ்வொரு கம்பனியினதும் சந்தைப் பங்கு வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கம்பனிகளால் வழங்கப்படும் எரிவாயுவின் தரத்தைப் பரிசோதிப்பதற்கு அல்லது ஒழுங்குறுத்துவதற்கு முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதை அறிவாரா;

(ii) எரிவாயுவின் தரத்தைப் பரிசோதிப்பதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் அந்நிறுவனங்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை;

(iii) எரிவாயுவின் தரத்தைப் பேணிவருவதற்காக மேற்படி நிறுவனங்களை வலுவூட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2650/2022

கௌரவ ரஊப் ஹகீம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்வியாண்டு 2016 – 2018 தொகுதியைச் சேர்ந்த தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரிகளுக்கு 2021 சனவரி மாதம் 18 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I(ஆ) தரத்திற்கான நியமனங்கள் வழங்கப்படுகையில், இஸ்லாம் சமய பாடத்தைக் கற்பிப்பதற்காக நியமனங்கள் வழங்கப்பட்டனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நியமனம் பெற்ற ஒவ்வொருவரினதும் பெயர், முகவரி மற்றும் இணைக்கப்பட்ட பாடசாலை என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2653/2022

கௌரவ மயந்த திசாநாயக்க,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடன் பெற்றுள்ள அரச நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் யாவை என்பதையும்;

(ii) ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மேற்படி கூட்டுத்தாபனத்தின் கடன்களின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கூட்டுத்தாபனம் அரச நிறுவனங்களுக்கு வழங்கியுள்ள எரிபொருளுக்கான பணம் அறவிடப்படவுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ் ஒவ்வொரு நிறுவனத்தினதும் பெயர் மற்றும் அறவிடப்பட வேண்டிய பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினை நிதி ரீதியாக வலுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2688/2022

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,—அரச சேவைகள், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிராமிய மக்களுடைய போக்குவரத்து வசதிகளை விரிவாக்கும் நோக்கத்துடன், அப்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் கிராமிய மட்டத்தில் பாலங்களை அமைக்கும் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு கடந்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்குறித்த கருத்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் குருநாகல் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஒவ்வொரு பாலக் கருத்திட்டத்தின் பெயர், உரிய பிரதேச செயலகப் பிரிவு, மதிப்பீட்டுத் தொகை, வேலை ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் தற்போதைய முன்னேற்றம் என்பன யாவையென்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் குருநாகல் மாவட்டத்தில் பாலங்களை நிர்மாணிக்கும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிடப் பட்டிருப்பின், அந்த ஒவ்வொரு பாலக் கருத்திட்டத்தின் பெயர், உரிய பிரதேச செயலகப் பிரிவு, மதிப்பீட்டுத் தொகை மற்றும் வேலைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கும் காலப்பகுதி என்பன யாவையென்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2749/2022

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இலங்கை மகாவலி அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்ட கிவுல் ஓயா கருத்திட்டத்திற்கு வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தை அமுலாக்குவதற்காக வெட்டி துப்பரவாக்கப்படவுள்ள வனப்பகுதியின் அளவு ஏக்கர்களில் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கு செலவாகும் மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத்தொகை, உள்நாட்டு நிதி மூலம் ஒதுக்கப்பட்டதா என்பதையும்;

(v) இன்றேல், அது வெளிநாட்டு உதவியா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டம் ஆரம்பிக்கப்படுதல் தொடர்பாக பிரதேசத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தை அமுலாக்குவது தொடர்பில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் விருப்பம் தெரிவிக்காத பட்சத்தில், அதனை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2767/2022

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அனுமதியின்றி அரச காணிகளைச் சுவீகரித்து அபிவிருத்தி செய்துள்ள ஆட்களுக்கு, சட்ட ஆவணங்கள் வழங்கப்படுவதை துரிதப்படுத்தும் பொருட்டு 2020.09.10 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2192/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையானது, அதையடுத்த 12 நாட்களுக்குப் பின்னர் அதாவது, 2020.09.22 ஆம் திகதிய 2194/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் இரத்துச்செய்யப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2020.09.10 ஆம் திகதிய 2192/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைக்கு அமைய கிடைத்துள்ள விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட வாரியாக தனித் தனியாக யாது என்பதையும்;

(ii) அத்தகைய விண்ணப்பப் படிவங்களில் ஆராயப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) 2020.09.10 தொடக்கம் 2020.09.22 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ள உறுதிகள், உரிமப் பத்திரங்கள் மற்றும் பிற சட்ட ஆவணங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி (iii) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு உறுதிகள், உரிமப் பத்திரங்கள் மற்றும் பிற சட்ட ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு பயனாளியினதும் பெயர், முகவரி மற்றும் ஒதுக்கப்பட்டுள்ள காணியின் பரப்பளவு தனித் தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2768/2022

கௌரவ அஜித் மான்னப்பெரும,— அரச சேவைகள், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004 ஆம் ஆண்டில் மேல் மாகாணத்தில் வருமானப் பரிசோதகர் பதவிக்கென ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள்;

(ii) அத்தகைய ஒவ்வொரு வழிமுறைக்கென தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைகள் தனித்தனியாகவும்;

(iii) 2015 ஆம் ஆண்டின் பின்னர், 06/2006 ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கு அமைய மேல் மாகாணத்தின் உள்ளூரதிகார சபைகளில் வருமானப் பரிசோதகர் பதவிக்கென ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்ட வழிமுறை;

(iv) அதற்கென தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைகள்;

யாவை என்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 06/2006 ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கு அமைய, 2004 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட வருமானப் பரிசோதகர்களின் சம்பளங்களில் குறைப்பு ஏற்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதனை நிவர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2770/2022

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பின் (சார்க்-SAARC) கொழும்பு சமவாயம் மற்றும் 16 ஆவது மாநாட்டு அமர்வின் பிரகாரம் 8000 மெ.தொ. விசேட அரிசி இருப்பு ஒன்றும் 2008 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 100,000 மெ.தொ. அரிசி காப்பு இருப்பு ஒன்றும் உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் பேணப்பட வேண்டுமென்ற போதிலும், 2020 ஆம் ஆண்டில் உணவு ஆணையாளர் திணைக்களம் அரிசி இருப்புகள் எதனையும் பேணவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரிசி இருப்புகள் பேணிவரப்பட்டிருப்பின், தனியார் துறையின் அரிசிக்கான ஏகபோக உரிமையைத் தகர்த்து அரிசிக்கென சமநிலையான விலையொன்றைப் பேண முடிந்திருக்கும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்குறிப்பிட்ட இருப்புகளுக்கென அரிசிக் கையிருப்பைப் பேணுவதற்குத் தயாரிக்கப்படவுள்ள திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2783/2022

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— அரச சேவைகள், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தின் நிர்மாணப் பணிகள் இதுவரையில் நிறைவு செய்யப்படவில்லை என்பதையும்;

(ii) 2019.03.07ஆம் திகதி அதன் உள்ளக விளையாட்டரங்கும் நீச்சல் தடாகமும் திறந்து வைக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) இதுவரை அவை பாவனைக்காக அளிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பொது விளையாட்டு மைதானத்தை —

(i) நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு;

(ii) நிர்மாணிப்பதற்காக இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ள தொகை எவ்வளவு;

(iii) நிர்மாணிக்கும் ஒப்பந்தக்காரர்கள் பற்றிய விபரங்கள் யாவை;

(iv) நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்யும்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுகை வழிமுறை பின்பற்றப்படாவிட்டால், அதற்கான காரணம் யாது;

(v) நிர்மாணத்திற்காக மரப் பலகைகளுக்குப் பதிலாக இறப்பர் கம்பளம் பயன்படுத்தப்பட்டுள்ளமைக்கான காரணம் யாது;

(vi) நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்து பயன்பாட்டுக்காக அளிக்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி விளையாட்டு மைதானம் அமைக்கப்படும் காணியின் உரிமையாளர்கள் யாவர் என்பதையும்;

(ii) அந்த நிர்மாணத்திற்காக குறித்த காணி உரிமையாளர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணம் யாது என்பதையும்;

(iv) நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்ற பின்னர் அந்த விளையாட்டு மைதானம் யாரால் நிர்வகிக்கப்படும் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2837/2022

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பிரதம அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மட்டக்களப்பு மாவட்டத்தில் —

(i) வதியும் வீட்டு தேவையுடைய ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தனியார் காணிகளில் பகுதி அளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மாதிரிக் கிராமங்களாக அமைக்கப்படுகின்ற வீடமைப்புக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2022 மே 19, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

8/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்காக புதிய சட்டங்களை விதிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) நீதி அமைச்சர் இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடலொன்றை சிங்கப்பூர் அரசாங்கத்துடன் நடத்தியுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) சமூக ஊடகங்கள் பற்றிய அரசாங்கத்தின் நிலைப்பாடு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

41/2022

கௌரவ புத்திக பத்திறண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இயற்கையாக வளரும் மனித நுகர்வுக்கு உகந்த காளான்கள் தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி காளான் வகைகளின் எண்ணிக்கை யாது;

(iii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iv) இவற்றில் அகணிய காளான் வகைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இன்றளவில் சுயதொழிலாக காளான் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் பயிர்ச்செய்கையாளர்களுக்குத் தேவையான விதைகள் இறக்குமதி செய்யப்படுகின்றனவா;

(ii) ஆமெனில், குறிப்பிட்ட நாடுகள் யாவை;

(iii) இதற்காக ஒரு வருடத்துக்கு செலவிடப்படும் நிதித்தொகை யாது;

(iv) சுதேச காளான் விதைகளை பயிர்ச்செய்கையாளர்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(v) ஆமெனில், குறிப்பிட்ட நடவடிக்கைகள் யாவை ;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) காளான் பயிர்ச்செய்கையாளர்களுக்கு அரசாங்கம் சலுகைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா;

(ii) ஆமெனில், அச்சலுகைகள் யாவை;

என்பதை அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2971/2022

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள நாத்தண்டிய, இரணவில கிராமத்தில் வாழ்கின்ற மீனவக் குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அக்கிராம மக்கள் பயன்படுத்தும் மீன்பிடிப் படகுத்துறை இன்றளவில் கடுமையாக கடலரிப்புக்கு உள்ளாகியுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) இதன் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள இக்கிராமத்தவர்கள் எதிர்நோக்கியுள்ள இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3086/2022

கௌரவ தவராஜா கலை அரசன்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின் கல்முனை நகரையும் கல்லோயா குடியிருப்பையும் இணைக்கும் கிட்டங்கி ஆற்றின் குறுக்காக அமைந்துள்ள பிரதான வீதி பருவ மழைகாலத்தில் ஐந்து அடிகளுக்கு மேல் நீரில் மூழ்குவதன் காரணமாக அவ்வீதியைப் பயன்படுத்தும் மக்கள் பல சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என்பதையும்;

(ii) மேற்படி வீதியினூடாக அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு பெருமளவிலான மக்கள் பயணிக்கின்றனர் என்பதையும்;

(iii) கிட்டங்கி ஆற்றின் குறுக்காக பாலமொன்று நிர்மாணிக்கப்படாததன் காரணமாக அவ் வீதியை பயன்படுத்தியபோது விபத்துக்களுக்கு உள்ளானதன் விளைவாக பலர் மரணித்துள்ளதோடு சொத்துக்களும் அழிவடைந்துள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியில் கிட்டங்கி ஆற்றின் குறுக்கே இதுவரை பாலமொன்று நிர்மாணிக்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி பாலம் நிர்மாணிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3156/2022

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு 200 புலனாய்வு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2018 ஆம் ஆண்டில் விண்ணப்பங்கள் கோரப்பட்டன என்பதையும்;

(ii) 2018.10.27 ஆம் திகதி நடாத்தப்பட்ட ஆட்சேர்ப்புப் பரீட்சைக்கு சுமார் 10,000 விண்ணப்பதாரிகள் தோற்றியதாகவும்;

(iii) ஒரு விண்ணப்பதாரியிடமிருந்து பரீட்சைக் கட்டணமாக ரூ. 750 அறவிடப்பட்டது என்பதையும்;

(iv) பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 408 விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர் என்பதையும்;

(v) நேர்முகப் பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 200 விண்ணப்பதாரிகளின் பாதுகாப்புத் தடைநீக்கச் சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ள போதிலும் இது வரையில் அவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படவில்லை என்பதையும்;

(vi) மேற்குறித்த ஆட்சேர்ப்புச் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டு தற்போது இரண்டு வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துள்ளதுடன் ஆட்சேர்ப்புத் தொடர்பான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 1½ வருடங்கள் கழிந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறித்த புலனாய்வு உத்தியோகத்தர்கள் விரைவில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3157/2022

கௌரவ உதயன கிரிந்திகொட,— பிரதம அமைச்சரும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சரும், புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1980 ஆம் ஆண்டு முதல் இதுவரை வெளிநாட்டுப் பிரசாவுரிமையைப் பெற்றுக் கொண்டுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களுக்கு மத்தியில் இரட்டைப் பிரசாவுரிமையைப் பெற்றுக்கொண்டுள்ள இலங்கையர்கள் தொடர்பான தகவல்கள் உள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) இலங்கையரொருவர் வெளிநாட்டுப் பிரசாவுரிமையைப் பெறுகையில் இலங்கை அரசாங்கத்தை விழிப்பூட்டுவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 1989 ஆம் ஆண்டு முதல் இதுவரை இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய வெளிநாட்டுப் பிரசாவுரிமையை மாத்திரம் கொண்டிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 1989 ஆம் ஆண்டு முதல் இதுவரை இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய இரட்டைப் பிரசாவுரிமையைக் கொண்டிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3174/2021

கௌரவ திலிப் வெதஆரச்சி,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட தங்காலை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபையானது பன்னிரண்டு உறுப்பினர்களை உள்ளடக்கிய போதிலும், இச்சங்கத்தின் அதிகாரத்தை பணிப்பாளர் சபையின் மூன்று உறுப்பினர்கள் பலவந்தமாக கைப்பற்றியுள்ளரென்பதையும்;

(ii) தங்காலை பிரதேச செயலகத்தில் இணைந்து கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரொருவர் இதில் தொடர்புபட்டிருக்கின்றார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இது தொடர்பாக பொலிஸ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் (தென் மாகாணம்) இவ்விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) வரையறுக்கப்பட்ட தங்காலை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் பணத்திற்கு பொறுப்புக்கூறும் தரப்பினர்கள் யாவரென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3290/2022

கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுன்னாகம் தபால் அலுவலகம் மற்றும் தபால் நிலையப் பொறுப்பதிகாரியின் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிக்கும் பணிகளை நிறைவு செய்துள்ளதாக அப்போதைய யாழ்பாண மாவட்டச் செயலாளர் அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ள போதிலும் அந்நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படவில்லை என்பதையும்;

(ii) அதற்குரிய பெறுகைச் செயன்முறையானது குறைபாடுகளைக் கொண்டுள்ளதென தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) போதியளவு ஒதுக்கீடுகள் இல்லாமையின் காரணமாக மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்தை நிறுத்தப்போவதாக தற்போதைய மாவட்டச் செயலாளரால் ஒப்பந்தக்காரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் அது தவறாயானது என்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட நிர்மாணப்பணிகளை நிறைவு செய்யாததன் காரணமாக ஏற்பட்ட இழப்பீடு, முற்பணக்கொடுப்பனவில் கழிக்கப்படாத தொகை மற்றும் தாமதத்திற்காக அறவிடப்பட வேண்டிய தண்டப் பணத்தின் ஒரு பகுதி மாத்திரம் அறவிடப்பட்டமை என்பன தொடர்பில் எவ்வித அறிக்கைகளும் இல்லை என்பதையும்;

அவர் அறிவாரா ?

(ஆ) (i) இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இன்றேல், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) திட்டமிட்டவாறு மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன்?

3292/2020

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1970 ஆம் ஆண்டு வரை செயற்பட்டு வந்த திருகோணமலை மாவட்டத்தில் அமையப்பெற்றிருந்த கிண்ணியா சுற்றுலா நீதிமன்றம், வடகிழக்கு மாகாணங்களில் நிலவிய யுத்தச் சூழ்நிலை காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டது என்பதையும்;

(ii) நிரந்தர கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படும் வரை நீதிமன்ற செயற்பாடுகளை அரசாங்கக் கட்டிடமொன்றில் தற்காலிகமாக மீள ஆரம்பிப்பதற்கு கடந்த வருடம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதுவரை மேற்படி நீதிமன்ற செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) திருகோணமலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குகளின் எண்ணிக்கையினைக் குறைப்பதற்கும் கிண்ணியா பிரதேச மக்கள் வழக்கு நடவடிக்கைகளுக்கென திருகோணமலை வரை செல்லும்போது ஏற்படுகின்ற அசௌகரியங்களைக் குறைப்பதற்கும் கிண்ணியா சுற்றுலா நீதிமன்றத்தினை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3336/2022

கௌரவ அலி சப்ரி ரஹீம்,— பிரதம அமைச்சரும், பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2021 ஆம் ஆண்டு புத்தளம் மாவட்டத்தில் வெள்ள நிலைமை ஏற்பட்டது என்பதையும்;

(ii) மேற்படி வெள்ளம் காரணமாக புத்தளம் மாவட்டத்தில் குறிப்பாக புத்தளம் நகரத்தில் இறால் பண்ணைகளும், உப்பளங்களும் பாதிக்கப்பட்டன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) எதிர்காலத்தில் இவ்வாறான வெள்ள நிலை ஏற்படுவதைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2022 மே 20, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

253/2022

கௌரவ ஹேஷா விதானகே,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையின் முட்டை உற்பத்தியின் அளவு ஒவ்வொரு ஆண்டிலும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியினுள் முட்டை ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பின், அது தொடர்பான விபரங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்குறித்த காலப்பகுதியினுள் முட்டை இறக்குமதி செய்யப்பட்டிருப்பின், அது தொடர்பான விபரங்கள் யாவையென்பதையும்;

(iv) இலங்கையின் முட்டை உற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

573/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கோழிக் குஞ்சுகளைப் பெறுவதற்காக 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள தாய்க்கோழிகளின் எண்ணிக்கை;

(ii) அத்தகைய தாய்க்கோழிகளை இறக்குமதி செய்வதற்கென செலவிடப்பட்டுள்ள தொகை;

ஒவ்வோர் ஆண்டு வாரியாக தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தாய்க்கோழிகளை இறக்குமதிசெய்தல் தொடர்பாக ஏதேனும் மட்டுப்பாட்டை விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதில் தாக்கம் செலுத்திய காரணிகள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய மட்டுப்பாடானது, நாட்டில் முட்டை விலையிலும் கோழி இறைச்சி விலையிலும் ஏற்படுத்தும் தாக்கம் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1185/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வரையறுக்கப்பட்ட ஹேவாகம் கோரளை ஹங்வெல்ல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பாரிய நிதி மோசடி இடம்பெற்றுள்ளது என்பதையும்;

(ii) பிரதேசத்தின் விஹாரைகள் மற்றும் பொது மக்களின் நிதி மேற்படி கூட்டுறவுச் சங்கத்துடன் இணைந்த கிராமிய வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி வைப்பாளர்களுக்கு எந்தவொரு நிதியையும் மீளப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சங்கத்தினால் மோசடி செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) தமது நிதியைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ள வைப்பாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி மோசடி எவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை விளக்க முடியுமா என்பதையும்;

(iv) மேற்படி மோசடிக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் இனங்காணப் பட்டிருப்பின் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்த நிதி மோசடிக்கு மேற்படி சங்கத்தின் அப்போதைய பணிப்பாளர் சபை, கூட்டுறவுத் திணைக்கள அலுவலர்கள் மற்றும் தனியார் கம்பனியொன்று பொறுப்புக்கூற வேண்டும் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பின் அவை யாவை என்பதையும்;

(iii) அவர்களிடமிருந்து நிதியை அறவிட்டு வைப்பாளர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1187/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தற்போது தூண்களுக்கு மேலாக நிர்மாணிக்கப்பட்டுவரும் துறைமுக பிரவேச நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளுக்கான மதிப்பீட்டுச் செலவு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) இதற்காக நிதி பெற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறை யாதென்பதையும்;

(iv) இப்பணிக்காக நிதி பெற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1313/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) களனி கங்கையை அண்டியதாக அமைந்துள்ள கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அக்கைத்தொழிற்சாலைகளால் வெளியேற்றப்படும் கழிவுநீர், அந்த கங்கையுடன் கலப்பதை அறிவாரா என்பதையும்;

(iii) அந்தக் கழிவுநீர் காரணமாக களனி கங்கையின் நீருக்கு ஏற்படுகின்ற பாதிப்பு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) கழிவுநீரை களனி கங்கைக்கு வெளிவிடுவதைத் தடுக்க இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1473/2022

கௌரவ ரோஹண பண்டார,— பிரதம அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அநுராதபுரம் – அத்துலுநுவரவில் வசிக்கும் ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்களுக்கு இதுவரையில் சட்டரீதியான வசிப்பிடம் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி ஆட்களுக்கு சட்டரீதியான வசிப்பிடத்தை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1732/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் இதுவரை பதிவாகியுள்ள சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி சிறுநீரக நோயாளர்களில், சிறுநீரக நோயாளர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படுகின்ற நோயாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி கொடுப்பனவைப் பெறுவதற்காக காத்திருப்போர் பட்டியலிலுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) காத்திருப்போர் பட்டியலிலுள்ள சிறுநீரக நோயாளர்களுக்கு மேற்படி கொடுப்பனவை துரிதமாக வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1948/2022

கௌரவ வசந்த யாப்பா பண்டார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பேராதனை, கன்னொருவ பிரதேசத்தில் மகாவலி கங்கையின் குறுக்கே நிர்மாணிக்கப்பட்டுள்ள சங்கிலிப் பாலத்திற்கு அருகில் பேராதனை தாவரவியற் பூங்காவிற்கு நேரெதிர் திசையை நோக்கியதாக மகாவலி கங்கையை ஆக்கிரமிக்கும் வகையில் சட்டவிரோதமாக ஹோட்டல் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி சட்டவிரோத நிர்மாணிப்பைத் தடுப்பதற்கு இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கண்டி அனிவத்த பிரதேசத்தில் தொடங்வல புதிய பாலத்திற்கு இடது புறத்தில் அமைந்துள்ள (அனிவத்தையிலிருந்து ஹல்ஒலுவ வீதிக்கு பிரவேசிக்கும் இடத்தில்) மகாவலி கங்கையின் ஒதுக்குப் பிரதேசத்தில் பெரும் எண்ணிக்கையான சட்டவிரோத நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி சட்டவிரோத நிர்மாணிப்புகள் தொடர்பாக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) சட்டவிரோத நிர்மாணிப்புகளைத் தடுப்பதற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1960/2022

கௌரவ காமினி வலேபொட,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள் யாவை;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள்;

வெவ்வேறாக யாவை என்பதையும் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2906/2022

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த ஆட்சிக் காலத்தில் மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கூட்ட அறிக்கைகள் முறையாக பேணிவரப்பட்டிருக்கவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இதன் காரணமாக அரசாங்க நிதி மோசடி செய்யப்படுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இதன் காரணமாக அரசாங்க நிதி மோசடி செய்யப்படுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அங்கீகாரமின்றி அந்த நிதியத்துடன் தொடர்பு இல்லாத உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இதனூடாக மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?